வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 119/2022

**அரசு தரப்பு சாட்சி 21**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பால்ராஜ் | தாலுக்கா | : | பெரியகுளம் |
| தகப்பனார் / பெயர் | : | துரைச்சாமி | தொழில் | : | விவசாயம் |
| ஊர் | : | வடுகபட்டி | வயது | : | 64/2025 |

<u>(எதிரி 1, 2, 4 ஆஜர்)</u>

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 31.01.2025.

<u>அரசு தரப்பில் **21** ம் சாட்சி முதல் விசாரணை</u>

நான் தற்போது வடுகபட்டில் குடியிருந்து வருகிறேன். மேல்மங்கலம் ஒத்தவீடு இளந்தோப்பில் எனக்கு தோட்டம் உள்ளது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. எனக்கு 3ம் எதிரி வித்யாவையும் எனக்கு தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீஸார் எனக்கு சம்மன் சார்வு செய்தபோது தான் வழக்கு பற்றி தெரிய வந்தது. அதில் எனது தந்தை பெயர் தவறாக உள்ளது. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(**அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி கேட்டுகொண்டதன் பேரில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது**)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

நான் போலீஸ் விசாரணையில் போது கடந்த 18.01.2021ம் தேதி இரவு 7.45 மணியவில் வைகைபுதூரில் இருந்து ஜெயமங்கலம் ரோட்டில் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது உமாராணி காட்டுக்கு பக்கத்தில் ஓர் ஆண் பெண்ணை இருசக்கர வாகனத்தில் ஏற்றிகொண்டு போனதை பார்த்ததாகவும், மூன்று நாட்கள் கழித்து 21.01.2021ம் தேதி

உமாராணி காட்டுக்குள் பாதி எரிந்த நிலையில் பிரேதம் கிடப்பதாக தகவல் தெரிந்து போலீஸ் வந்துள்ளதாகவும், நானும் சென்று பிரேத்தை பார்த்தேன் என்றும், பின் ஒரு வாரம் கழித்து 27.01.2021ம்தேதி மேற்படி இடத்தை போலீசார் ஓர் ஆணையும் பெண்ணையும், கூட்டி வந்து உமாராணி காட்டுக்குள் பிரேதம் கிடந்த இடத்தை பார்த்து கொண்டிருந்ததாகவும், அப்போது அங்கிருந்த நான் அந்த பெண் 18.01.2021ம் தேதி இரவு நான் பார்த்த பெண் தான். அந்த ஆண் வேர் ஒரு நபர் என்றும் நான் அன்று இரவு பார்த்த நபர் கொலை செய்யப்பட்ட நபர் என்றும், தெரிந்த கொண்டேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
31.01.2025
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 119/2022

**அரசு தரப்பு சாட்சி 22**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அய்யனார் | தாலுக்கா | : | பெரியகுளம் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | கருப்பு | தொழில் | : | விவசாயம் |
| ஊர் | : | மேல்மங்கலம் | வயது | : | 40/2025 |

<u>(எதிரி 1,2,4 ஆஜர்)</u>

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023 ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 31.01.2025.

<u>அரசு தரப்பில் 22 ம் சாட்சி முதல் விசாரணை</u>

நான் தற்போது மேல்மங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலியாக வேலை பார்க்கிறேன். எனக்கு 1,2 எதிரிகளை தெரியும், வித்யா என்பவரை எனக்கு தெரியாது. 4 ம் எதிரியை தெரியாது. 18.01.2021 ம் தேதி வைகைபுதூரிலிருந்து இரவு 9.00 மணியளவில் எனது இருசக்கர வாகனத்தில் சாப்பாடு வாங்கிவிட்டு மேல்மங்கலத்திற்கு எனது வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். உமாராணி தோட்டத்திற்கு அருகில் வந்த போது ஆஜர் 1,2 எதிரிகள் பைகில் என்னை கடந்து சென்றார்கள். நான் வீட்டிற்கு சென்று விட்டேன். அதன் பிறகு 3 நாட்கள் கழித்து உமாராணி தோட்டத்தில் ஒரு ஆண் பிரேதம் எரிந்து கிடப்பதாக தகவல் தெரிந்து நான் அங்கு சென்றேன். அதன்பறகு 27.01.2021 ம்தேதியன்று போலீஸ் அனைவரும் உமாராணி தோட்டத்திற்கு வந்தார்கள் விசாரணைகாக வந்தார்கள். நானும் போனேன். அப்போது அங்கு ஆஜர் 1,2 எதிரிகளும் அங்கு இருந்தார்கள். அங்கு ஊர்மக்களும் இருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

18.01.2021ம்தேதி நான் பைகில் சென்றபோது ஆஜர் 1,2 எதிரிகள் பைகில் என்னை கடந்து சென்றார்கள் என்று போலீசார் என்னை விசாரித்தபோது சொன்னோன என்றால் நான் சொன்னேன். நான் போலீஸ் விசாரனையின் போது மேற்கூறியவாறு சொல்லவில்லை என்றாலும் தற்போது போலீஸ் சொல்லிகொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இரவு 9.00 என்பது இருள் நிறைந்தது என்றால் சரிதான், அன்று நிலா வெளிச்சம் இருந்தது. மேல்மங்கலத்திலிருந்து வடுகபட்டி 1 ½ கி.மீ. தூரம் இருக்கும். சித்தையன் கோட்டை சொக்கலிங்கபுரம் எனக்கு தெரியாது. வடுகபட்டி, சித்தையன் கோட்டை சொக்கலிங்கபுரம் ஊரில் யார் யார் வசித்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. 1,2 எதிரிகள் எங்கு குடியிருக்கிறார்கள், எந்த ஊர் மற்றும் அவர்கள் குடும்ப விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. ஆஜர் 1,2 எதிரிகள் நானும் போகும் திசையிலேயே என்னை முந்தி சென்றார்கள் என்றால் சரிதான். அவர்கள் சென்ற வண்டி எண்கள் தெரியாது. போலீசார் என்னை 1முறை விசாரித்தார்கள். நான் போலீசாரிடம் எனது வண்டி எண்ணை சொன்னேனா என்று எனக்கு ஞாபகமில்லை. 18.01.2021ம் தேதிக்கு பின்னர் மூன்று நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரிக்கவில்லை. அன்றைய தேதியில் நான் போலீசார் இடம் எதுவும் சொல்லவில்லை. அன்றை தேதியில் போலீசார் சம்பவ இடத்தில் வைத்து யாருக்காவது சம்பவம் ஏதாவது தெரியுமா என்று கேட்டார்கள என்றால் இல்லை அதன் பிறகு போலீசார் வந்த போது தான் சம்பவம் குறித்து சம்பவம் குறித்து கேட்டார்கள் பக்கத்து தோட்டத்தில் உள்ள என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னிடம் யாரேனும் அங்க அடையாளம் குறித்து கேட்டார்களா என்றால் இல்லை. ஒத்தவீடு வைகை டேம் இருந்து 1 கி.மீ தூரத்தில் உள்ளது. போலீசார் என்னை விசாரித்த போது எதற்காக வைகை டேம் சென்றேன் என்று சொன்னோனா என்றால் சாப்பாடு வாங்க சென்றேன் என்று சொன்னேன். அங்ஙனம் நான் போலீசார் விசாரனையில் சொல்லவில்லை என்றாலும் தற்போது ஏதாவது காரணம் சொல்ல வேண்டும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் புகார் எதுவும் எழுதி வாங்கவில்லை என்னை போலீசார் விசாரனை தான் செய்தார்கள். 18.01.2021ம்தேதிக்கு பின்பு எத்தனை முறை நான் அந்தரோட்டில் சென்று வந்தேன் என்றால் அந்த வழியாக தான் தோட்டத்திற்கும் ஆடு மாடு மேய்ப்பதற்கு செல்வது வழக்கம், அதனால் நான் அடிக்கடி சென்று வந்தேன். 19.01.2021 மற்றும் 20.01.2021 ஆகிய தேதிகளில் போலீசார் சம்பவ

இடத்தில் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உமாராணி தோட்டத்தில் பால் பண்ணை உள்ளது என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன தேதியில் 1, 2 எதிரிகள் எனது இருசக்கர வாகனத்தை கடந்து செல்லவில்லை என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகள் எனது இருசக்கர வாகனத்தை கடந்து சென்றார்கள் என்று போலீசார் சொல்லி கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேல்மங்கலம் ரோடு சுமார் 2 கி.மீ தூரம் இருக்குமா என்றால் இருக்கும். என்னை போலீசார் அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கு கூட்டி சென்றார்களா என்றால் இல்லை. போலீசார் இந்த வழக்கில் சாட்சியை உருவாக்க வேண்டும் என்பதற்காக எனக்கு சொல்லி கொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
31.01.2025
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.